ria
Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும் பணத்தை அனுப்ப உடன் நாடுங்கள்
Send and receive money worldwide

e-பத்திரிகை
uthayam news
# உதயம்
செய்திகள்
தமிழர்களின் புது யுகம்
உதயம் 04 | ஒளி 03 | 16 அக்டோபர் 2024 | www.uthayamnews.com

# தமிழரசின் நிர்வாகத்துக்கு தடை கோரி வழக்குத் தாக்கல்

# நீதிமன்றத்தை நாடிய ஆயுட்கால உறுப்பினர்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், பதில் பொதுச் செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோர் அந்த பதவியை வகிக்க இடைக்காலத் தடை விதிக்க வேண்டும், 2024 ஜனவரி மாதத்தின் பின்னர் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானங்களை சட்டவலுவற்றதாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து,



யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான மார்க்கண்டு நடராசா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு – கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த முன்னாள் கிழக்கு

பக்கம் 02

# தமிழரசுக் கட்சியை அழிக்க சதி; ஒருபோதும் இடமளியோம்

## மாவை திட்டவட்டம்..!



பக்கம் 02

# தமிழரசுக் கட்சியை அழிக்க சதி; ஒருபோதும் இடமளியோம்

## மாவை திட்டவட்டம்..!



வழக்குகளைத் தொடர்ச்சியாகத் தாக்கல் செய்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்கச் சிலர் கனவு காண்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக அதிருப்தியாளர்கள் எத்தனை வழக்குகளையும் தாக்கல் செய்யலாம். ஆனால், அந்த வழக்குகளை நீதிமன்றத்தில் நாம் முறியடித்தே தீருவோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின்போது எம்மால் பிரேரிக்கப்பட்ட பல வேட்பாளர்களைப் புறந்தள்ளி சிலர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து வேட்பாளர்களை நியமித்துள்ளமை உண்மைதான். அதனை நான் ஏற்கவில்லை.

அதனால்தான் இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இருந்து விலகி நிற்கின்றேன்.

ஆனாலும், நான் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகவில்லை. தமிழரசுக் கட்சியை முடக்க சிதைக்க அழிக்க நாம் ஒருபோதும் இடமளியோம்.

எமது கட்சியைப் பாதுகாக்க நாம் எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளோம்.

அதனைச் சிலர் இன்று மறந்து செயற்படுகின்றனர். அதுதான் எமக்கு வேதனையளிக்கின்றது என வும் தெரிவித்தார்.

# தமிழரசின் நிர்வாகத்துக்கு தடை கோரி வழக்குத் தாக்கல்

## நீதிமன்றத்தை நாடிய ஆயுட்கால உறுப்பினர்

மாகாண சபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா என்பவரால் கடந்த 10 ஆம் திகதி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதன்போது, வழக்கைத் தொடர்ந்துள்ள மார்க்கண்டு நடராசா முன்வைத்துள்ள கோரிக்கைகளாவன 1 முதல் 3 வரையான எதிராளிகள் 27.01.2024 இற்குப் பின்னராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் வெற்றும் வெறிதானவையும் என்ற கட்டளைக்கும் தீர்ப்புக்கும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு என்ற பெயரில் எவ்வித கூட்டங்களையும் கூட்டக்கூடாது என்ற இடைக்காலத் தடை விதிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 1ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 2ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் வழக்காளியின் சார்பில் வேண்டுதல் முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி த.டினேஷ் மன்றில் ஆஜரானார். இந்த வழக்கின் அடுத்த தவணை நவம்பர் 18 ஆம் திகதிக்குத் திகதியிடப்பட்டுள்ளது.



# சரவணபவனின் மாம்பழ இராஜதந்திரம்

தெய்வீகன்

நான்கு வருடங்களுக்கு முன்னர் கொழும்புக்குச் சென்று மகிந்தவுக்கு யாழ்ப்பாண மாம்பழங்களைக் கொடுத்த, தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள், சில தினங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவையிடம் மாம்பழங்களுடன் ஆஜராகியிருக்கிறார். தான் தேர்தலில் குதித்திருக்கும் புதிய கட்சிக்கு ஆசீர்வாதம் வேண்டி, மாவையிடம் மாம்பழத்தை நீட்டியிருக்கிறார். இனிப்போ புளிப்போ எதுவும் புரியாமல் அரசியல் சுவை மரத்துப் போயிருக்கும் பழம் தலைவரான மாவையரும் தன்னிடம் வந்தவர்களைப் பார்த்து அப்பாவியாகச் சிரித்திருக்கிறார்.

முருகனுக்கும் பிள்ளையாருக்கும் இடையிலான சகோதரச் சிக்கலுக்குக் காரணமாயிருந்த மாம்பழம் போல, தமிழரசுக் கட்சிக்கும் – ஜனநாயகத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சகோதரச் சிக்கலுக்குள்ளேயும் பாவம் மாம்பழம்தான் இன்று அகப்பட்டிருக்கிறது.

இவர்களது தேர்தல் பிரச்சினைக்கு மாம்பழம் ஒரு மங்களகரமான தீர்வை வழங்குதோ இல்லையோ, வரலாற்று ரீதியாக 'மாம்பழ இராஜதந்திரம்'– Mango Diplomacy– என்ற முக்கிய அரசியல் பாரம்பரியத்தை அவ்வளவு இலகுவாக எடை போட்டுவிடமுடியாது.

இந்தியாவில் நேரு முதல் மன்மோகன் சிங் வரை இந்த மாம்மபழ இராஜதந்திரத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். அதனால் பல அரிய காரியங்களையும் அவர்கள் சாதித்திருக்கிறார்கள்.

இரண்டாயிரங்களில், இந்திய மாம்பழ இறக்குமதிக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டிருந்தபோது, அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் டில்லிக்கு விஜயம் செய்திருந்தார். அந்த விஜயத்தின் போது, மாம்பழ விவகாரத்துக்கு ஒரு முடிவெடுப்பது என்று தீர்மானித்த மன்மோகன் சிங், புஷ்ஷிற்கே மாம்பழத்தை உண்ணக்கொடுத்து மடக்கினார். அத்தோடு அமெரிக்காவில் இந்திய மாம்பழத்துக்கான தடை நீங்கியது. ஆனால், அதற்குப் பதிலாக – இந்தியாவில் அதுவரை தடைசெய்யப்பட்டிருந்த ஹார்விடேவிட்ஸன் மோட்டார் சைக்கிள்களை அனுமதிப்பதற்கு மன்மோகன் ஒப்புக்கொண்டார்.

பாகிஸ்தானும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு மாம்பழம் வழங்குவதை பாரம்பரியமான இராஜதந்திரப் பழக்கமாகக் கொண்டிருக்கிறது. முன்னாள் பிரதமர் ஸியா அல் ஹக் அவர்கள், இந்திரா காந்திக்கு பாகிஸ்தானின் அதிசுவை வாய்ந்த ஞூச்ஞுச்தடூ என்ற மாம்பழ வகையை அனுப்பி, இந்தியாவுடனான இன்னுறவை வெளிப்படுத்தினார். ஆனால், இந்திராவுக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்தியா இதனைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. 'ஒரு பக்கம் குண்டு வைத்துவிட்டு, இன்னொரு பக்கம் மாம்பழம் அனுப்பி எங்களை





# சரவணபவனின் மாம்பழ இராஜதந்திரம்

மடையன் ஆக்கப் பார்க்கிறீர்களா' என்று முகத்தை திருப்பிக்கொள்வது வழக்கம். 2015 இல் அப்போதைய பிரதமர் நவாப் ஷெரீப், மோடிக்கு மாத்திரமல்ல, முன்னாள் பிரதமர்கள் மன்மோகன் சிங், வாஜ்பாய் மற்றும் ஜனாதிபதி பிரனாப் முகர்ஜி ஆகியோருக்கும்கூட பத்து - பத்து கிலோ மாம்பழங்களை அனுப்பியிருந்தார். இந்தியா நாக்கை மடித்து முறைத்துப் பார்த்துவிட்டு இருந்துவிட்டது.

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மாம்பழப் பிரியம்தான் அண்மைக்காலத்தில் பலரும் அறிந்தது. அவர் இந்தியாவின் மாநிலத்தலைவர்களுக்குக்கூட மாம்பழங்களை அனுப்பி வைத்தவர். சரவணபவன் அவர்கள் மகிந்தவுக்கு மாம்பழம் கொடுத்த அடுத்தவருடம், ஷேக் ஹசீனாவும் மகிந்தவுக்கு ஒருதொகை மாம்பழங்களைப் பிரியத்துடன் அனுப்பி வைத்தார்.

தெற்காசியத் தலைவர்கள் இவ்வாறு மாறி - மாறி மாம்பழத் தட்டுக்களைப் பரிமாறிக்கொண்டாலும், மேற்குலகிற்கு ஆசியத்தலைவர்கள் மாம்பழங்களைப் பரிசளிக்கும்போது, அதற்கு மிகப்பெரிய பெறுமதி இருந்தது. கூடவே, மாம்பழத்தை எப்படி உண்பது என்றுகூட அவர்களுக்குப் பயிற்றுவிக்கவேண்டியிருந்தது. முன்னாள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஒருவர் கூறும்போது, இந்தியத் தலைவர்கள் எனக்கு மாம்பழங்களை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், எனக்கு அதனை எப்படி முறையாகச் சாப்பிடுவது என்று தெரியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

ஆக, இன்று ஜனநாயகத் தமிழரசுக் கட்சியென்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள தேர்தல் கட்சியோ அதிலுள்ளவர்களின் நடவடிக்கைகளோ பெறுமதியற்றதாக இருக்கலாம். ஆனால், அவர்கள் தாங்கப்போகும் சின்னமான மாம்பழத்திற்குள்ள அரசியல் - இராஜதந்திர பெறுமானம் வரலாற்றில் மிகப்பெரியது.

**பழம் பத்திரம்!**





# அச்சுறுத்தல்களை நேர்த்தியாகக் கையாளும் சுமந்திரன்...

**தெய்வீகன்**

தமிழரசுக் கட்சிக்கு உள்ளும் புறமும் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்த பல்வேறு அச்சுறுத்தல்களைசுமந்திரனும் அவர் தரப்பும் மிக நேர்த்தியாகக் கையாண்டிருப்பதை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ள வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் வெளிக்காட்டியுள்ளது. தமிழரசுக் கட்சியின் பெருமளவிலான ஆதரவாளர்கள் இந்தப் பெருங்கூட்டத்தில் ஆஜரானது மாத்திரமன்றி, தங்களது ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் தரப்பினருக்கும் இந்த எழுச்சியின் மூலம் வலுவானதொரு செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது – புலிகளினால் மாத்திரமே சாத்தியமாக்க முடிந்த – கூட்டணி. அது அவர்களின்பாலிருந்த அச்சத்தின் முன்னால் மண்டியிட்ட தமிழ் அரசியல் தரப்பின் விசுவாசத்தின் விளைவு. புலிகளற்ற கடந்த 15 வருடங்களில், தமிழரசுக் கட்சி, ஒட்டியிருந்த குழப்படிகாரக் கூட்டணிக்கட்சிகளை இவ்வளவு தூரம் இழுத்து வந்ததே பெரும் சாதனை. வீடு என்ற ஒற்றைச் சின்னத்தின் பலன்களை அனுபவித்துக்கொண்டு – தங்களது அத்தனை அட்டகாசங்களையும் நிறைவேற்றுவதற்காக – கட்சி அலுவலகத்திற்குள் உறங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு சுமந்திரன் என்பவர் அச்சுறுத்தும் பேர்வழியானார். அவரை எதிர்ப்பதற்கு உள்ளும் புறமும் எத்தனையோ குழிபறிப்புக்கள் – துரோகங்கள் – என்று அத்தனை அழுக்குகளும் அரங்கேறின. தற்போது ஏறக்குறைய அனைத்துக் கறைகளும் தாங்களாகவே கழன்றுகொண்டன.

இன்று சிவராஜ் சித்த மருத்துவர் லேகியம் விற்பதுபோல சிலர் முகநூலில் வந்து 'தமிழர் தரப்பில் மாற்றம் வேண்டும், தமிழரசுக் கட்சிக்கு மாற்று வேண்டும்' என்று உதிரிக் கட்சிகளுக்கு ஆதரவு வேண்டி கூவுவதை அறிவார்ந்த தமிழ் தரப்பினர், புன்னகையோடு எதிர்கொள்ளப் பழகிவிட்டனர்.

பொறுப்பான – பாரம்பரிய – தமிழர் தரப்பு என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சி – கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது – இன்று மிகப்பெரியளவில் தன்னை மாற்றியமைத்திருக்கிறது. இனி இதற்கான மக்களாணையைப் பெற்றுக்கொள்ளும் ஜனநாயகப் பாதையில் பயணிப்பதே எஞ்சியுள்ள செயல்வழி.

பிரபாகரன் என்ற ஒற்றைத்தலைவன் ஓர்மத்துடன் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருந்தபோது – அவர் வழியில் பயணித்த தளபதிகளை பிரபாகரனின் செம்புகள் என்று மக்கள் யாரும் சொன்னதில்லை. பிரபாகரனுக்காக பேசிய மதியுரைஞர் பாலசிங்கம் கம்பு சுத்துகிறார் என்றும் கூறியதில்லை. செயல்வழி வீரர்களின் பாதைக்கு ஒற்றுமை என்று பெயர்.

தமிழரசுக் கட்சியின் பயணம் இவ்வளவு காலமும் இயன்றளவு அவ்வாறானதாகவே அமைந்திருக்கிறது.

முப்படைகளையும் கட்டி ஆண்டவர்களின் பேரழிவினால் ஏற்பட்ட பெரு வெளியில் ஒரே நாளில் கொண்டுபோயிருத்தப்பட்ட சம்பந்தரும் அவர் அணியினரும், எதையெல்லாம் வென்று தந்தார்கள் என்பதிலும் பார்க்க, தமிழர்கள் தொடர்ந்து தோற்றுவிடாமல் இயன்றளவு காத்துக்கொண்டார்கள் என்று சொல்லவேண்டும்.

போர் முடிந்த பதினைந்து வருடங்களில் – அப்பாவி மக்களை வீரப் பேச்சுக்களால் கொம்பு சீவி – இன்னொரு அழிவுக்குள் அழைத்துச்சென்று வீழ்த்திவிடாமலும் – அவ்வாறு வீழ்த்துவதற்குக் கங்கணம் கட்டிய தரப்புக்களிடமிருந்து காப்பாற்றியதும் – தமிழரசுக் கட்சியின் பெருமைக்குரிய வெற்றி. தென்னிலங்கையின் சகல அரசியல் – அதிகார – தரப்புக்களுடனும் சமதையாக இருந்து ஒரு உரையாடல் மேற்கொள்ளவல்ல உறவினை ஏற்படுத்தி வைத்திருப்பதும், அதற்கு அப்பாலும் சர்வதேச தரப்புக்களுடன் தமிழர் அபிலாஷைகள் குறித்த அழுத்தத்தினை தொடர்ந்து பேணுவதும் இன்றைய உலக அரசியல் சூழலில் குறிப்பிடத்தக்க வெற்றியே. தமிழரசுக் கட்சி பல நடவடிக்கைகளை நேர் சீராக்குவதற்கும் – புதியவர்களுடன் தன்னைப் பொருத்திக்கொள்வதற்கும் – காலம் கனிந்திருக்கிறது.



மக்கள் ஆணையோடு அவை சிறக்கட்டும்.




# சங்குச் சின்னம் யாருக்குச் சொந்தம்?

நிலாந்தன்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு வரை அது தேர்தல் திணைக்களத்திடம் இருந்தது. ஜனாதிபதி தேர்தலின் போது அது தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் பொதுச் சின்னமாக இருந்தது. பொதுக் கட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சி அல்ல. எனவே அதற்கு சின்னம் கிடையாது. அதனால் பொது வேட்பாளர் ஆகிய அரியநேத்திரன் பொதுக்கட்டமைப்பின் சார்பாக ஒரு சுயேச்சை வேட்பாளராகத்தான் களமிறங்கினார்.

ஜனாதிபதி தேர்தல் சட்டங்களின் படி ஜனாதிபதி தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் உறுப்பினர் களமிறங்கலாம். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுயேச்சையாக களமிறங்கலாம். அந்த அடிப்படையில் தான் அரிய நேத்திரன் களம் இறக்கப்பட்டார். ஒரு சுயேட்சை வேட்பாளராகிய அவர் சங்குச் சின்னத்தை விருப்பத் தெரிவாக முன் வைத்தார். தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பொழுது, கொழும்பில், பொது வேட்பாளருக்கு விக்னேஸ்வரனின் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் உதவினார். பொது வேட்பாளருக்கு உதவியாக இருந்த தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகளும் விக்னேஸ்வரனின் கட்சிப் பிரதிநிதியும் இணைந்து சங்குச் சின்னத்தை விருப்பத் தெரிவாக கேட்டார்கள். ஏனைய சுயேச்சை வேட்பாளர்கள் அச்சின்னத்தைக் கேட்காதபடியால் அது பொது வேட்பாளருக்கு வழங்கப்பட்டது. இப்படித்தான் சங்குச் சின்னம் பொது வேட்பாளருக்குக் கிடைத்தது.




தேர்தல் முடிந்ததும் அது மீண்டும் அரசாங்கத்திடமே சென்று விட்டது. அது அரசாங்கத்திடம் இருந்த ஒரு காலகட்டத்தில்தான் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் கூட்டணி சின்னத்தை தேர்தல் திணைக்களத்திடம் கோரிப் பெற்றது.

ஆனால் சங்குச் சின்னத்துக்கு வாக்களித்த இரண்டு லட்சத்து 26 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களும் அந்த சின்னத்தை வெற்றி பெற வைப்பதற்காக தமிழர் தாயகம் எங்கும் இரவு பகலாக உழைத்த தொண்டர்களும் அது தம்முடைய சின்னம் என்று நம்புகிறார்கள்.சட்டப்படி அது அவர்களுடைய சின்னம் இல்லை என்ற போதிலும் மக்கள் ஆணையைப் பொறுத்தவரை அது அவர்களுடைய விருப்பச் சின்னம் ஆகும்.

அது மட்டுமல்ல பொது வேட்பாளரை முன்நிறுத்துவதற்கான தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் தமிழ் தேசிய கட்சிகள்



# சங்குச் சின்னம் யாருக்குச் சொந்தம்?

ஏழுக்கும் இடையிலான அந்த உடன்படிக்கையின் ஐந்தாவது பந்தி பின்வருமாறு கூறுகிறது தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்பட வேண்டும். அதாவது பொது வேட்பாளரின் பொதுச் சின்னம் எனப்படுவது தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாகும். இங்கு பொதுநிலைப்பாடு என்று கூறப்படுவது தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாடு ஆகும்.

எனினும் சங்குச் சின்னத்தின் வெற்றிக்காக உழைத்தது பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் மட்டும் அல்ல. அவற்றுக்கும் அப்பால் யாழ்ப்பாணத்தில் தமிழரசு கட்சி பிரமுகர்கள் பலர் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சங்குச் சின்னத்துக்காக உழைத்திருக்கிறார்கள். குறிப்பாக சரவணபவன் போன்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்குக்காக உழைத்திருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி சங்கை ஆதரித்தது. மட்டக்களப்பில் தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் சங்குச் சின்னத்துக்கான பிரச்சார மேடைகளில் வெளிப்படையாகத் தோன்றினார்கள். அவர்களோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகராகிய அருண் தம்பிமுத்துவும் சங்குக்காக உழைத்தார். இவை தவிர தேர்தல் பகிஸ்கரிப்பை ஏற்றுக் கொள்ளாத சைக்கிள் கட்சி ஆதரவாளர்கள் கூட சங்குக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

மேலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் அடங்காத வெவ்வேறு மக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ சங்குச் சின்னத்தின் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள்.முக்கியமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமதிகம் உழைத்தார்கள்.புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியின்றி சங்குச் சின்னத்தைக் கட்டியெழுப்பியிருக்கவே இயலாது. எனவே சங்கு பெற்ற வாக்குகள் எனப்படுகின்றவை தமிழ்த்தேசியத் திரட்சிக்கு கிடைத்த வாக்குகள். அவை பொதுக் கட்டமைப்புக்கும் அப்பால் தமிழ் கூட்டு உணர்வோடு உழைத்த அனைவருக்கும் கிடைத்த வாக்குகள்.

எனவே அது தமிழ்க் கூட்டு உணர்வுக்கு கிடைத்த வாக்கு. தமிழ் தேசியத் திரட்சிக்கு கிடைத்த வாக்கு. அதற்கு பொதுக் கட்டமைப்பு மட்டும் உரிமை கோர முடியாது.சங்கு, தமிழ்க் கூட்டுணர்வைப் பிரதிபலித்த ஆகப்பிந்திய சின்னம்.அது இப்



e-பத்திரிகை உதயம்

# சங்குச் சின்னம் யாருக்குச் சொந்தம்?

பொழுதும் தமிழ் மக்களின் சுவர்களில் மங்காதிருக்கும் சுவரொட்டிகளிலும்,வாக்களித்த மக்களின் மனங்களிலும் ஓட்டிக்கொண்டிருக்கும் ஒரு சின்னம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு எனப்படுவது தமிழ் பொது நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் முழுமையான ஒரு கூட்டு அல்ல. அது தமிழ் தேசிய பொதுக்கூட்டமைப்புகள் காணப்பட்ட ஒரு கூட்டு மட்டுமே. தமிழ் மக்கள் பொதுச்சபை தேர்தலில் நேரடியாக பங்கேற்காவிட்டால் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் தமிழ் மக்கள் கூட்டணியும் பொதுக் கட்டமைப்பாக தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை என்று டில்கோ விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற சந்திப்பில் தெளிவாகக் கூறியிருந்தன. இந்நிலையில் தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் தமிழ் மக்கள் கூட்டணி போன்ற மூன்று தரப்புக்களும் இல்லையென்றால்,அது பொதுக் கட்டமைப்பு அல்ல.ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டும் தன்னை பொதுக் கட்டமைப்பு என்று அழைத்துக் கொள்ள முடியாது. எனவே பொதுச் சின்னத்துக்கு உரிமை கோர முடியாது.

ஆனால் அவர்கள் தேர்தல் திணைக்களத்திடம் விண்ணப்பித்து சங்கு சின்னத்தை பெறுவதை சட்டபீதியாக தடுப்பதற்கு அப்புரிந்துணர்வு உடன்படிக்கை உதவாது. ஏனெனில் அது ஒரு சுயேச்சை வேட்பாளரின் சின்னம் என்ற அடிப்படையில் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு சட்ட வலு கிடையாது. தார்மீக வலு மட்டுமே உண்டு.எனினும் தமிழ் மக்கள் பொதுச் சபை ஒரு சட்டத்தரணியூடாக தேர்தல் திணைக்களத்திற்குத் தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது.

ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தார்மீகத் தளத்தில் நின்ற சிந்தித்தால் அந்த சின்னத்தை பயன்படுத்தக் கூடாது. சட்டப்படி அவர்களை யாரும் தடுக்க முடியாது. ஆனால் தார்மீக தளத்தில் அவர்கள் அதற்கு உரிமை கோர முடியாது.

சட்டப்படி அது இப்பொழுது ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக இருக்கலாம். ஆனால் தமிழ் தேசிய கூட்டுணர்வைப் பொறுத்தவரை அது தமிழ் மக்களின் மனங்களில் ஐம்பதே நாட்களில் பதிக்கப்பட்ட ஒரு சின்னம். எப்படி இந்திய அமைதிகாக்கும் படை நிலை கொண்டிருந்த கால கட்டத்தில், ஈரோஸ் இயக்கத்தின் சுயேச்சை சின்னமாகிய வெளிச்ச வீடு சின்னம் மிகக்குறுகிய கால கட்டத்துக்குள், மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களின் மனங்களில் பதிக்கப்பட்டதோ அப்படித்தான் சங்கும் மிகக் குறுகிய கால கட்டத்துக்குள் தமிழ் மக்களுடைய மனங்களில் ஆழப் பதிக்கப்பட்டது. எனவே தமிழ் கூட்டுணர்வின் சின்னமாக மாறிய அதனை தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகளின் கூட்டு ஒன்று பயன்படுத்துவது என்பது தமிழ் கூட்டுணர்வை அவமதிப்பது. தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீட்டை அவமதிப்பது.அக்குறியீட்டுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை அவமதிப்பது.

> **யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் அடங்காத வெவ்வேறு மக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ சங்குச் சின்னத்தின் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள். முக்கியமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமதிகம் உழைத்தார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியின்றி சங்குச் சின்னத்தைக் கட்டியெழுப்பியிருக்கவே இயலாது.எனவே சங்கு பெற்ற வாக்குகள் எனப்படுகின்றவை தமிழ்த்தேசியத் திரட்சிக்கு கிடைத்த வாக்குகள். அவை பொதுக் கட்டமைப்புக்கும் அப்பால் தமிழ் கூட்டு உணர்வோடு உழைத்த அனைவருக்கும் கிடைத்த வாக்குகள்.**





# தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களின் ஊடக சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக யாழ். தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த ஆனந்த சங்கரி 91 வயதிலும் தான் போட்டியிடுவது பதவி ஆசைக்கு அல்ல என்றும் தந்தை செல்வநாயகம் முதல் ஜீ.ஜீ பொன்னம்பலம் வரை உருவாக்கிய கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி எனவும் தெரிவித்தார்.



# தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பு மனு தாக்கல்

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அருண்தம்பி முத்து வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அருண்தம்பி முத்து தலைமை வேட்பாளராக போட்டியிடுகின்றார்.





# தமிழர் விடுதலைக் கூட்டணியில் களமிறங்கியுள்ள விசேட தேவையுடைய பெண் வேட்பாளர்

வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவினை தமிழர் விடுதலை கூட்டணி தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்புமனுவினை தாக்கல் செய்திருந்தது.

வன்னி மாவட்டத்தில் இக் கூட்டணியானது சமூக ஆர்வலர் சந்திரகுமார் கண்ணனை முதன்மை வேட்பாளராக கொண்டு போட்டியிடுவதுடன், விசேட தேவையுடைய பெண்ணொருவரும் வேட்பாளராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.





குடும்பத்துக்கு பொருளாதாரக் கஷ்டம் இருந்த போதிலும், திசாநாயக்க திறமை மிகுந்த ஒரு மாணவனாக பிரகாசித்தார். பாடங்களை புரிந்துகொள்வதில் மிகுந்த ஆற்றலையும் நுட்பநுணுக்கமான விடயங்களை எளிதில் கிரகித்துக் கொள்ளும் திறமையும் கொண்டவராக அவர் இருந்தார். நல்ல நினைவாற்றலும் அவருக்கு இருந்தது.

# இலங்கை இடதுசாரி நாயகன் அநுர

டி.பி.எஸ். ஜெயராஜ்

அமெரிக்க பத்திரிகையாளர் எட்கார் சினோவின் சீன வானில் சிவப்பு நட்சத்திரம் (Red Star over China ) என்ற நூல்தான் கட்டுரைக்கு இந்த தலைப்பை வைப்பதற்கு தூண்டுதல் அளித்தது. சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மாவோ சேதுங்குடனும் செஞ்சேனையுடனும் தனது ஊடாட்டம் பற்றிய உயிர்களையுடைய விபரிப்பாக அமைந்த அந்த முதலில் 1937 ஆம் ஆண்டில் பிரசுரமானது. மாவோ என்று அறியப்பட்ட மாவோ சேதுங்கைப் பற்றி அந்த நேரத்தில் மேற்குலகில் பெரிதாகத் தெரியாது. பல வருடங்கள் கழித்து மாவோவின் தலைமையில் கம்யூனிஸ்டுகள் சீனாவில் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது சீன வானில் சிவப்பு நட்சத்திரத்தின் பிரதிகள் பிரமிக்கத்தக்க அளவில் பெரும் எண்ணிக்கையில் உலகெங்கும் விற்பனையானது. சீனாவின் புதிய கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் பற்றி ஒரு உள்நோக்கைப் பெறுவதற்கு அந்த நூல் பேராவலுடன் வாசிக்கப்பட்டது.

இலங்கையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க ஒரு அர்த்தத்தில் இன்று இலங்கை வானில் எழுந்திருக்கும் சிவப்பு நட்சத்திரம் அல்லது இடதுசாரி நட்சத்திரமே . அநுரா அல்லது ஏ.கே.டி. என்று பிரபல்யமாக அறியப்பட்ட திசாநாயக்க 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இலங்கையின் ஒனபதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அவர் செப்டெம்பர் 23 ஆம் திகதி பதவியேற்றார்.

55 வயதான திசாநாயக்க ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. ) யினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தலைவர். ஒரு தீவிரவாத இயக்கமாக இருந்து பிறகு அரசியல் கட்சியாக மாறிய ஜே.வி.பி. ஆறு தசாப்த கால வரலாற்றைக் கொண்டது. தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி.யையும் வேறு 21 அமைப்புக்களையும் உள்ளடக்கிய இடதுசாரிப் போக்குடைய ஒரு பரந்த கூட்டணியாகும்.



# இலங்கை இடதுசாரி நாயகன் அநுர

இந்த அமைப்புக்களில் சிறிய கட்சிகள், தொழிற் சங்கங்கள், உரிமைகள் குழுக்கள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் அமைப்புகள் அடங்குகின்றன. ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியாகும். திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் திசையறிகருவி சின்னத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

தேர்தலில் வெற்றி பெற்ற நாளில் இருந்து சர்வதேச ஊடகங்கள் (மேற்கத்தைய மற்றும் இந்திய ஊடகங்கள்) திசாநாயக்கவை மார்க்சிஸ்ட், மார்க்சிஸ்ட் -- லெனினிஸட், சோசலிஸ்ட், நவ மார்க்சிஸ்ட், இடதுசாரி, மத்திய இடது அரசியல்வாதி என்று பலவாறாக வர்ணித்து வருகின்றன. சில இந்திய விமர்சகர்கள் அவருக்கு 'இந்திய விரோதி' என்றும் 'தமிழர் விரோதி' என்றும் நேர்மையற்ற முறையில் நாமகரணம் சூட்டுகின்றனர். எனது நோக்கில் திசாநாயக்க நிச்சயமாக இடதுசாரிக் கோட்பாடுகளுக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு இடதுசாரி.ஆனால், பாரம்பரிய அர்த்தத்தில் ஒரு மார்க்சிஸ்ட் என்று அழைக்கமுடியுமா என்பது எனக்கு சந்தேகமே.

சில காலத்துக்கு முன்னர் ட்ரம்ப் என்ற ஒரு பேர்வழி 'வெள்ளை மாளிகையை' அசிங்கப்படுத்துவதற்கு முன்னதாக அந்தக் காலத்தில் அமெரிக்க ஜனாதிபதிகள் பரவலாக பெருமளவுக்கு மதிக்கப்பட்டனர். பல அமெரிக்க ஜனாதிபதிகளின் வாழ்க்கைச் சரிதைகள் வாசித்துச் சுவைக்கப்பட்டன. பலர் ஆபிரகாம் லிங்கனையே சிறந்த அமெரிக்க ஜனாதிபதியாக நோக்குவர். அடிமை முறையை ஒழிப்பதற்கும் அடிமைகளின் தளைகளை அறுத்து அவர்களை விடுவிப்பதற்கும் உள்நாட்டுப் போர் ஒன்றையே நடத்தும் அளவுக்கு அவர் சென்றார். லிங்கன் மிகவும் எளிமையான பின்புலத்தைக் கொண்ட ஒரு மனிதர். அமெரிக்காவின் அதியுயர்ந்த பதவிக்கு அவரின் உயர்வு 'மரக் கொட்டகையில் இருந்து வெள்ளை மாளிகைக்கான' ஒரு கதை என்று அழைக்கப்படும். அதே போன்றே திசாநாயக்கவும் கூட இலங்கையின் முதல் குடிமகனாக வந்திருக்கும் ஒரு சாதாரண மனிதரே. அவரின் குறிப்பிடத்தக்க உயர்வையும் கூட 'மண்வீட்டில் இருந்து ஜனாதிபதி மாளிகைக்கு ' வந்த ஒரு காவியம் என்று வர்ணிக்க



முடியும். இந்த பின்னணியில்தான் இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவை இந்த பத்தி இரு பாகங்களாக ஆராய்கிறது.

## தம்புத்தேகம வாழ்க்கை

திசாநாயக்க முதியான்சலாகே அநுரா குமார திசாநாயக்க 1968 நவம்பர் 24 ஆம் திகதி பிறந்தார். அவரின் பிறந்த இடம் மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் கலேவெல ஆகும்.அவரின் பெற்றோர்கள் கண்டிய கொவி பௌத்த சாகியத்தைச் சேர்ந்தவர்கள். திசாநாயக்கவும் அவரது மூத்த சகோதரியும் சிறுவர்களாக இருந்தபோது குடும்பம் வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டதுக்கு குடிபெயர்ந்தது. சில வருடங்கள் கெக்கிராவையில் வாழ்ந்த பிறகு குடும்பம் அதே மாகாணத்தின் தம்புத்தேகமவுக்கு நகர்ந்தது.

தம்புத்தேகம அநுராதபுரம் நகரில் இருந்து 25 கிலோமீட்டர்கள் தொலைவிலும் தலைநகர் கொழும்பில் இருந்து 190 கிலோமீட்டர்கள் தொலைவிலும் அமைந்திருக்கும் ஒரு விவசாயப் பிரதேசமாகும். திசாநாயக்க தனது ஆரம்பக்கல்வியை காமினி மகா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலைக் கல்வியை தம்புத்தேகம மத்திய கல்லூரியிலும் நிறைவுசெய்தார். அவரே தம்புத்தேகம மத்திய கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக பிரவேசம் செய்த முதல் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

திசாநாயக்கவின் தந்தையார் ஒரு விவசாயத் தொழிலாளி. பல வருடங்களுக்கு பிறகு அவருக்கு நில அளவையாளர் திணைக்களத்தில் ஒரு அலுவலக உதவியாளராக நிரந்தரமான தொழில் வாய்ப்பு கிடைத்தது. சில சந்தர்ப்பங்களில் நில அளவையாளர்கள் களவேலைக்கு செல்லும்போது தந்தையார் உபகரணங்களை தூக்கிச்செல்லும் வேலையையும் செய்தார். குடும்பப் பெண்மணியான தாயாருக்கு நெல் விதைப்பு மற்றும் அறுவடைக் காலங்களில் ஒழுங்காக வேலை கிடைக்கும்.

தம்புத்தேகமவுக்கு வந்த பிறகு ஆரம்ப வருடங்களில் குடும்பம் பெரும் பணக் கஷ்டத்துக்குள்ளானது. அவர்களது வீட்டுக்கு மின்சார வசதி கிடையாது. இளம் திசாநாயக்க இரவு வேளைகளில்



# இலங்கை இடதுசாரி நாயகன் அநுர

மண்ணெண்ணெய் குப்பி விளக்கின் வெளிச்சத்தில்தான் படிக்க வேண்டியிருந்தது. குடும்ப வருமானத்துக்கு உதவுவதற்காக தாயார் இனிப்புப் பலகாரங்கள் தயாரிப்பார். மகன் அவற்றை எடுத்துச் சென்று அருகாமையில் உள்ள தம்புத்தேகம புகையிரத நிலையத்தில் யாழ்தேவி, உத்தரதேவி மற்றும் ரஜரட்ட போன்ற நீண்டதூர ரயில்களின் பயணிகளுக்கு விற்பனை செய்வார். பாடசாலை விடுமுறை நாட்களில் திசாநாயக்க குழி வெட்டுபவராக பகுதிநேர வேலை செய்தார்.

குடும்பத்துக்கு பொருளாதாரக் கஷ்டம் இருந்த போதிலும், திசாநாயக்க திறமை மிகுந்த ஒரு மாணவனாக பிரகாசித்தார். பாடங்களை புரிந்துகொள்வதில் மிகுந்த ஆற்றலையும் நுட்பநுணுக்கமான விடயங்களை எளிதில் கிரகித்துக் கொள்ளும் திறமையும் கொண்டவராக அவர் இருந்தார். நல்ல நினைவாற்றலும் அவருக்கு இருந்தது. பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துக்கு தம்புத்தேகம மத்திய கல்லூரியில் இருந்து தெரிவான முதல் மாணவன் என்ற வகையில் அந்த பாடசாலைக்கு அவர் பெருமை சேர்த்தார். ஜனாதிபதி தேர்தலுக்கு சில வாரங்கள் முன்னதாக அந்த கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை கௌரவித்தனர். அந்த நிகழ்வு ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு கிடைக்கவிருந்த வெற்றிக்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது.

## ஆர்வமிக்க வாசகர்

திசாநாயக்க தனது மாணவ காலத்திலும் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்திலும் ஒரு ஆர்வமிக்காவாசகர். இப்போதும் தான். சில வருடங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கிய அவரிடம் விரும்பிய நூல்கள் குறித்து கேட்கப்பட்டது. லியோ டால்ஸ்ராயின் ‘ போரும் சமாதானமும்’ , மார்க்சிம் கோர்க்கியின் ‘தாய்’ , மகிந்த பிரசாத் மாசிம்புல எழுதிய ‘செங்கோட்டன்’, மோகன் ராஜ் யடவலவின் ‘ஆதரணீய விக்டோரியா’ ஆகியவை அவர் குறிப்பிட்டவற்றில் சில நூல்கள். பல சிறுகதைகளையும் தான் விருப்பி வாசித்ததாக அவர் கூறினார்.

தனது பாடசாலை நாட்களில் டாக்டர் ஆபிரஹாம் கோவூரின் படைப்புக்களை வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார். தென்னிந்திய மாநிலமான கேரளாவில் திருவல்லா என்ற பகுதியைச் சேர்ந்த டாக்டர் கோவூர் இலங்கைக்கு குடிபெயர்ந்து கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் பல வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றினார். பகுத்தறிவாளர்கள் சங்கத்தின் தலைவராக இருந்த்அவர் மூடநம்பிக்கைகள், போலிச் சாமியார்கள் மற்றும் மதங்களின் பெயரால் இடம்பெறும் போலித்தனங்களுக்கும் எதிராக பெருமளவு நூல்களை எழுதினார்.

மாபெரும் சிந்தனையாளர்களினதும் அரசியல் தலைவர்களினதும் சரிதைகளையும் சுயசரிதைகளையும் திசாநாயக்க நன்கு சுவைத்துப் படிப்பார். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், காந்தி, டிட்டோ, காஸட்ரோ மற்றும் கிளின்ரோ ஆகியோரின் சரிதைகள் திசாநாயக்கவின் வாழ்வை வளப்படுத்திய மகத்தான மனிதர்களின் நூல்களில் முக்கியமானவை. அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறுகையில் ‘எனது வாழ்க்கையை பல நூல்கள் மாற்றியமைத்தன.சோவியத் ரஷ்யாவின் இலக்கியங்களினால் குறிப்பாக நாவல்கள், சிறுகதைகளினால் நான் மிகவும் ஆழமாக ஆகர்சிக்கப்பட்டேன். அந்த காலகட்டத்தின் இலக்கியங்கள் எமது வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின’ என்று குறிப்பிட்டிருந்தார். வாசிப்பின் மீதான திசாநாயக்கவின் காதலையும் நூல்கள் தனது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் பற்றிய அவரின் மதிப்பையும் வைத்துக்கொண்டு அவரை வெறுமனே ஒரு புத்தகப்பூச்சி என்று நினைத்துவிடக் கூடாது. அவருக்குள் இருக்கின்ற ஒரு ‘மெய்வல்லுனரை ’ மக்கள் நேரிலும் தொலைக் காட்சிகளிலும் பார்த்திருப்பார்கள். சுறுசுறுசுறுப்பாக நடந்துவந்து மேடைகளில் அவர் ஏறுகின்ற பாங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. அவரது இந்த உடல்தகுதியின் தோற்றுவாய் அநுராதபுரத்தின் தண்ணீரில் தங்கியிருக்கிறது.

## நல்ல நீச்சல்வீரர்

திசாநாயக்க வேகமும் உரமும் கொண்ட நல்ல நீச்சல் வீரர். தனது மாணவ காலத்தில் அவர் அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த திஸ்ஸவேவ, அபயவேவ, நுவரவேவ ஆகிய மூன்று வாவிகளில் நீந்துவார். முதலாவது நூற்றாண்டில் வலகம்பா மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட



# இலங்கை இடதுசாரி நாயகன் அநுர

நுவரவேவவின் முழுமையான மூன்று கிலோ மீட்டர்கள் நீளத்தையும் திசாநாயக்க அடிக்கடி நீந்தி முடிப்பார்.

அரசியல் செயற்பாட்டாளராக மாறிய பிறகு திசாநாயக்க இலங்கை பூராவும் பயணம் செய்தார்.எங்கெல்லாம் குளங்கள், வாவிகள் மற்றும் ஆறுகள் இருக்கின்றனவோ அங்கு சாத்தியமான வேளைகளில் அவர் நீச்சலில் இறங்குவதற்கு தவறுவதில்லை.' நான் நீச்சலை மிகவும் விரும்புபவன். சராசரியாக சுமார் இரு கிலோமீட்டர்கள் நீந்துவேன். அதனால் எனக்கு ஒரு நீச்சல் தடாகம் போதாது. உண்மையைச் சொல்கிறேன், எனக்கு நீச்சல் தடாகங்களைப் பிடிப்பதில்லை' என்று அவர் ஒரு தடவை நேர்காணலில் கூறினார். நீச்சலும் வாசிப்பும் படிப்பும் நிறைந்த அமைதியான கிராமப்புற வாழ்க்கையில் இருந்து திசாநாயக்க தனது பதினகவைகளினா இறுதி வருடத்தில் அரசியலில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். 1987 ஆம் ஆண்டு போரையும் சமாதானத்தையும் கொண்டதாக இருந்தது. அதுவே திசாநாயக்கவின் வாழ்வை முற்றுமுழுதாக மாற்றியமைத்த ஆண்டாகவும் அமைந்தது. அதற்கு பிறகு நடந்தவற்றை விளங்கிக்கொள்வதற்கு வரலாற்றை ஒரு தடவை திரும்பிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

## இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை

இலங்கையின் இனநெருக்கடி பல வருடங்கள் நீடித்த கொடூரமான ஒரு ஆயுதமோதலாக மாறியது. முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஜே.ஆர். ஜெயவர்தனவும் கொழும்பில் 1987 ஜூலை 29 ஆம் திகதி இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். போர்நிறுத்தம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. அமைதியைப் பேணுவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய இராணுவம் இந்திய அமைதிகாக்கும் படை என்ற பெயரில் நிலைகொண்டது.

இலங்கை ஆயுதப்படைகளுக்கும் ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் மெச்சத்தக்க குறிக்கோளுடனேயே ராஜீவ் -- ஜெயவர்தன உடன்படிக்கை கைச்சாத்திடப்பப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று நிலைத்து நிற்கக்கூடிய ஒரு சமாதானத்தை கொண்டுவருவதற்கு பதிலாக, இந்திய - இலங்கை உடன்படிக்கை மேலும் வன்முறைக்கும் இரத்தக்களரிக்கும் வழிவகுத்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்து மீண்டும் போரைத் தொடங்கியது. விரைவாகவே வடக்கிலும் கிழக்கிலும் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக விடுதலை புலிகள் முழு அளவிலான கெரில்லப்போரை தொடுத்தனர்.

## றோஹண விஜேவீர

அதேவேளை றோஹண விஜேவீர தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுனயும் (ஜே.வி.பி. ) இந்திய - இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து தென்னிலங்கையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது.பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியில் இருந்தபோது 1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. ஆயுதக்கிளர்ச்சி ஒன்றை தொடங்கியது.பல நாடுகளின் உதவியுடன் அந்த கிளர்ச்சியை அரசாங்கம் ஈவிரக்கமற்ற முறையில் கொடூரமாக நசுக்கியது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். மேலும் ஆயிரக்கணக்கானவர்களன சிறையில் அடைக்கப்பட்டனர். இது முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சி என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஜே.வி.பி. மீதான தடையை நீக்கி விஜேவீர உட்பட சிறையில் அடைக்கப்பட்டிருந்த அந்த இயக்கத்தின் உறுப்பினர்களை விடுதலை செய்தது. ஜே.வி.பி. மீண்டும் அரசியல் நீரோட்டத்தில் பிரவேசித்தது.விஜேவீர 1982 அக்டோபர் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டு மூன்றாவதாக வந்தார்.( ஐக்கிய தேசிய கட்சி முதலாவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இரண்டாவதாகவும் வந்தன ) இலங்கை அரசியலில் ஒரு மூன்றாவது சக்தியாக 'புதிய இடது ' ஜே.வி.பி. மேலெழுந்தது போன்று தோன்றியது.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் பல அமைச்சர்களின் அந்தரங்க ஆதரவுடன் 1983 ஜூலையில்



# இலங்கை இடதுசாரி நாயகன் அநுர

நாடுபூராவும் தமிழர்களுக்கு எதிராக இனவன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அந்த வன்செயல்களுக்கு ஜே.வி.பி.பொறுப்பென்று தவறாகக் குற்றஞ்சாட்டி ஜனாதிபதி ஜெயவர்தன அந்த கட்சியை தடை செய்தது. ஜே.வி.பி. தலைமறைவு இயக்கமாக செயற்படத் தொடங்கியது.விஜேவீர உட்பட தலைவர்களும் தலைமறைவாகினர்.

## ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி

ஆனால், இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வடக்கிலும் கிழக்கிலும் இந்திய அமைதிகாக்கும் படை நிலை கொண்டபோது ஜே.வி.பி. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டது. கடந்த காலத்தில் இந்திய மன்னர்கள் இலங்கை மீது நடத்திய பல்வேறு படையெடுப்புகள் பற்றிய பழைய அச்சங்களை மீண்டும் கிளறிய ஜே.வி.பி. சிங்கள பெரும்பான்மை மாகாணங்களில் இந்திய எதிர்ப்பு போராட்டம் ஒன்றை தொடங்கியது. அது ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி என்று அழைக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. இரண்டாவது கிளர்ச்சியை தொடங்கியபோது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகப் பெரும்பானமையா வாழும் பிரதேசங்களில் அந்த இயக்கத்துக்கு உறுப்பினர்கள் இருக்கவில்லை. அதனால் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஏழு மகாணங்களிலிலேயே அதன் ஆயுதப்போராட்ட நடவடிக்கைகள இடம்பெற்றன.

ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்பு இராணுவப் பிரிவுக்கு தேசபக்த மக்கள் இயக்கம் ( தேசப்பிரேமி ஜனதா வியாபாரய ) என்று பெயரிடப்பட்டது. மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கே தேசபக்திக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. தேசபக்த மக்கள் இயக்கத்தின் தளபதிக்கு கீர்த்தி விஜேபாகு என்று இயக்கப்பெயர் கொடுக்கப்பட்டு வரலாற்று சம்பவங்கள் நினைவு மீட்டப்பட்டன.

பத்தாவது நூற்றாண்டில் மன்னர்களான இராஜராஜ சோழனுக்கும் இராஜேந்திர சோழனுக்கும் எதிராக இளவரசர் கீர்த்தியே போராடினார். ருஹுணு இளவரசரான அவர் இறுதியில் பொலன்னறுவையில் இருந்து சோழ படையெடுப்பாளர்களை விரட்டி தன்னை விஜேபாகு மன்னன் என்று முடாசூடிக் கொண்டார். தேசபக்த மக்கள் இயக்கத்தின் தளபதி கீர்த்தி விஜேபாகுவின் உண்மையான பெயர் சமான் பியசிறி பெர்னாண்டோ. மொரட்டுவையில் லுணாவ பகுதியைச் சேர்ந்த அவர் களனி பல்கலைக்கழக பட்டதாரி.

## ஜே.வி.பி.யில் இணைவு

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ்தான் 19 வயதான அநுரா குமார திசாநாயக்க 1987 ஆம் ஆண்டில் தனது ஒன்றுவிட்ட சகோதரன் சுனில் இரத்நாயக்கவுடன் சேர்ந்து



ஜே.வி.பி.யில் இணைந்துகொண்டார். திசாநாயக்க 'சுனில் ஐயா' என்று அழைத்த அந்த சகோதரன் அவரின் வாழ்க்கையில் பெரும் செல்வாக்கைச் செலுத்தினார். தாய் நாட்டுக்காக தாங்கள் ஜே.வி.பி.யில் இணையவேண்டும் என்று திசாநாயக்கவை நம்பவைத்தவரே அந்த சுனில்தான்.

## அரவிந்த என்ற அநுரா

அநுரா குமார திசாநாயக்க ஜே.வி.பி.யில் இதைந்தபோது அவர் க.பொ.த. உயர்தர பபீட்சை எழுதிவிட்டு முடிவுகளுக்காக காத்துக் கொண்டிருந்தார். சில மாதங்களுக்கு பிறகு திசாநாயக்கவுக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தது. அவர் கண்டிக்கு சென்று தனது மூன்றாம் நிலைக் கல்வியை ஆரம்பித்தார். ஆனால் அவர் தனது கூடுதலான நேரத்தை தலைமறைவு அரசியல் நடவடிக்கைகளிலேயே செலவிட்டார்.'அரவிந்த' என்ற இயக்கப் பெயருடன் ஜே.வி.பி./ தேசப்பிரேமி ஜனதா வியாபாரயவுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார். ஜே.வி.பி.யின் பல்வேறு அமைப்புக்களிடையே தகவல்களைக் கொண்டு செல்லும் பணிகளை தூதருக்குரிய பணிகளை அவர் செய்தார்.

ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலம் நீடித்தது. அதில் ஜே.வி.பி.யினாலும் பொலிசார், பரா இராணுவம் மற்றும் படைகள் மேற்கொண்ட கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளினாலும் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அரசின் முகவர்களினால் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பாதுகாப்பு படைகளினாலும் அரசின்



# இலங்கை இடதுசாரி நாயகன் அநுரா

ஏனைய முகவர்களினாலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் நம்பகமான மதிப்பீடுகள் கிடைக்கவில்லை எனினும் ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உத்தியோகபூர்வ விபரங்கள் இருக்கின்றன. அந்த மூன்று வருட காலப்பகுதியில் 487 அரசாங்க சேவையாளர்கள், 342 பொலிஸ் காரர்கள், 209 பாதுகாப்பு படையினர், 16 அரசியல் தலைவர்கள் 4,945 குடிமக்கள் ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த தொகையில் 30 பௌத்த பிக்குகள்,இரு கத்தோலிக்க மதகுருமார், 52 பாடசாலை அதிபர்கள், நான்கு மருத்துவர்கள், 18 பெருந்தோட்ட அத்தியட்சகர்கள் மற்றும் 27 தொழிற் சங்கவாதிகளும் அடங்குவர். அதில் 93 பொலிஸ்காரர்கள் மற்றும் 69 படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களும் கூட அடங்குவர்.

## அரசின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை

ஜே.வி.பி.யினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கரவாதத்துக்கு இணையாக அரசின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளும் அமைந்தன. அரச பயங்கரத்தினால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களில் திசாநாயக்கவின் ஒன்றுவிட்ட சகோதரன் சுனில் அடங்குவார். சுனில் ஐயா கைதாகி சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்தார். அரவிந்த என்ற திசாநாயக்க பேராதனையை விட்டு தப்பியோடி தலைமறைவானார். அவர் தேடப்படும் ஒருவராக இருந்தார். அரசியலில் ஈடுபாடு இல்லாத அவரின் குடும்பம் தங்களது மண்வீட்டில் இருந்து ஒரு எளிமையான கல்வீட்டுக்கு குடிபெயர்ந்தது. அரவிந்தவுக்கு ஒரு எச்சரிக்கையாக அரசின் முகவர்கள் அந்த வீட்டுக்கு தீவைத்துக் கொளுத்தியதாக கூறப்பட்டது. திசாநாயக்க மேராதனையில் கல்வியை இடையில் நிறுத்தி தலைமுறைவு வாழ்க்கைக்கு சென்றார்.

பெரிதாக வெளியில் தலைகாட்டாமல் அவர் இடத்துக்கு இடம் சென்று வந்ததாக ஜே.வி.பி. வட்டாரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது. அந்தக் காலப்பகுதியே அவரது வாழ்க்கையில் மிகவும் ஆபத்தான கட்டமாக இருந்தது. றோஹண விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்க உட்பட பெரும்பாலான சிரேஷ்ட ஜே.வி.பி. தலைவர்கள் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். சிரேஷ்ட தலைவர்களில் சோமவன்ச அமரசிங்க மாத்திரமே உயிர்தப்பி இந்திய உதவியுடன் ஐரோப்பாவுக்கு தப்பிச்சென்றார். ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி முற்றுமுழுதாக நசுக்கப்பட்டது

## களனி பல்கலைக்கழகம்

நிலைவரம் தணியத் தொடங்கியது. எந்தவிதமான தொடர்புமின்றி ஒரு வருடத்துக்கும் கூடுதலான காலமாக தலைமறைவாக இருந்த பிறகு திசாநாயக்க வெளியில் வந்து சமூகத்தில் மீண்டும் இணைந்து கொண்டார்.'அரவிந்தவின்' அத்தியாயம் அத்துடன் முடிவுக்கு வந்தது. திசாநாயக்க தனது கல்வியை மீண்டும் ஆரம்பித்தார். இந்த தடவை களனி பல்கலைக்கழகத்துக்கு மாற்றம் பெற்று அங்கு கல்வியை தொடர்ந்தார்.

## தலைவிதி

ஜே.வி.பி.க்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரமான நடவடிக்கைகளில் இருந்து தப்பிய திசாநாயக்கவுக்கு எதிர்காலத்தில் பெரிய ஒரு பாத்திரத்தை வகிப்பதற்கு விதி எழுதப்பட்டிருந்தது போன்று தோன்றியது. இதிகாசத்தில் வரும் பீனிக்ஸ் பறவையைப் போன்று சாம்பலில் இருந்து ஜே.வி.பி. வெளிக்கிளம்பியது. திசாநாயக்க படிப்படியாக உயர்ந்து ஜே.வி.பி.யினதும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினதும் தலைவராக வந்தார். தற்போது அவர் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. இடதுசாரித்தாரகை இலங்கை மேலாக எழுந்திருக்கிறது. இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதை இரண்டாவது பாகத்தில் பார்ப்போம்.



# இனவாதத்தை மூலதனமாக வைக்காத அனுராவின் வெற்றி

அனுராவின் வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தமிழ் அதிகார வர்க்கத்தினர் பலர் சமூக வலைத்தளங்களின் பிதற்றுகின்றனர்.உங்களுக்கு ரணில் நல்லவர் சஜித் நல்லவர்,சரத் பொன்சேகா நல்லவர் ,சஜித்தோடு இருந்த எ.ஃ பீரிசு நல்லவர். ஆனால் அனுரா இனவாதி.வடக்கு கிழக்கை பிரித்த கட்சியைச் சேர்த்தவர்.என்னங்கடா உங்கட நியாயம் . ரணில் சஜித்,சரத் பொன்சேகா ,சஜித்தோடு இருந்த எ.ஃ பீரிசு எல்லோரும் வடக்கு கிழக்கிலே தேனும் பாலும் ஓடவிட்டவங்களா ? விடுதலை புலிகள் இஸ்லாமியர்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதை வைத்துக்கொண்டு ,அது தவறு என்பதை புலிகள் ஏற்றுக்கொண்ட பின்பும் இன்றளவும் புலிகள் எங்களை இன சுத்திகரிப்பு செய்தவர்கள் பயங்கரவாதிகள் என்று பரப்புரை செய்து கொண்டிருக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது .உங்களுக்குள் யாரும் பிரதேச வாதிகள் இல்லையா ?சாதி வெறியர்கள் இல்லையா?

ஸ்ரீலங்காவிலே முதல் தடவையாக இனவாதத்தை மூலதனமாக வைக்காமல் ஒருவர் தேர்தலிலே வென்றிருக்கிறார்.சிங்கள இளைய தலை முறை மாற்றத்தை விரும்புகிறது . ஆனால் நீங்கள் ? மாறமாட்டோம் என்று அ டம் பிடிக்கிறீர்கள்

1970 ல் நடத்திய ஆயுத போராட்டத்திலே அவர்கள் 13000 பேரை இழந்தார்கள். அதன் பின் மீண்டெழுந்து 1987-89 ல் நடத்திய ஆயுத போராட்ட த்திலே 60000 பேரை இழந்தார்கள் .அவர்களது தலைவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள்.



அதன் பின்பும் அவர்கள் மீண்டு வந்தார்கள்.ஆயினும் எங்களுக்குள் இருந்ததை போலச் சில புல்லுருவிகள் அவர்களுக்குள்ளும் ஆதிக்கம் பெற்றதால் தடம்புரண்டு விழுந்து எழும்பினார்கள் , பின்னர் தங்களது தவறுகளிலிருந்து படிப்பினைகளை பெற்று தங்களை மறுசீரமைத்துக்கொண்டு இன்று வெற்றியடைந்திருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் ....... நான் அவற்றை எழுத விரும்பவில்லை

தற்போது அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ள கலாநிதி லயனல் போபகே தெரிவித்துள்ள கருத்துக்களை படித்துப் பாருங்கள்.

கலாநிதி லயனல் போபகே, ரோஹன விஜேவீர தலைமையிலான ஜேவிபி இன் முதலாவது பொதுச் செயலாளரக இருந்தவர் . இருவரும் சம காலத்தவர்கள் மற்றும் ஒரே மாதிரியான சமூகப் பின்னணியை கொண்டவர்கள்.

இவர்கள் இருவரும் 1947 பாராளுமன்றத் தேர்தலின்போது மாத்தறை மாவட்டத்தில் யுஎன்பி ஆதரவாளர்களால் நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாதிப்புகளை எதிர்கொண்ட கம்யூனிஸ்ட் குடும்பங்களின் வாரிசுகள்.

1960 களில் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் மாணவராக இருந்த போபகே ஜேவிபி அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 1971 கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள்




# இனவாதத்தை மூலதனமாக வைக்காத அனுராவின் வெற்றி

சிறைத் தண்டனை அனுபவித்தார் .

பல்கலைக்கழக இறுதிப் பபீட்சையில் தோற்றுவதற்கென 1972 இல் கண்டி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து அவர் பேராதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மீண்டும் 1983 இல் 'தமிழர்களுக்கெதிரான வன்முறையைத் தூண்டினார்கள்' என்ற பொய் குற்றச்சாட்டின் பேரில் ஜே ஆர் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட 21 இடது சாரி செயற்பாட்டாளர்களில் அவரும் ஒருவர்.

'கறுப்பு ஜூலை அட்டூழியங்கள் தொடர்பாகச் சிரில் மத்தியூ மற்றும் காமினி திஸாநாயக்க போன்றவர்களைக் கைது செய்து, சிறையில் அடைக்காமல் எங்களைக் கைது செய்தது ஏன்? யுஎன்பி யைத்தடை செய்வதற்குப் பதிலாக, ஜேவிபியை தடை செய்தது ஏன்' எனக் கேட்டு, அச்சந்தர்ப்பத்தில் போலிஸாருடன் வாதிட்டதை நினைவு கூருகிறார் போபகே.

ஆனால், இரண்டு முதன்மையான விடயங்களின் அடிப்படையில் ரோஹன விஜேவீரவுடன் முரண்பட்டுக் கொண்ட அவர் 1983 இல் தனது பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்து, ஜேவிபி இலிருந்து வெளியேறினார்.

சிறுபான்மை இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுத்தமை மற்றும் ஜேவிபி மீண்டும் வன்முறையை ஓர் அரசியல் ஆயுதமாகக் கையில் எடுத்திருந்தமை ஆகிய இரண்டு நிலைப்பாடுகள் தொடர்பாக விஜேவீரவுக்கும், அவருக்குமிடையில் கடுமையான கருத்து முரண்பாடுகள் தோன்றின. அந்த நிலையில், கட்சியிலிருந்து வெளியேறுவதைத் தவிர அவருக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை . அதன் பின்னர் தொடர்ந்து ஜேவிபி இன் மீது அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கிறார்.

தற்போது அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் வசித்து வரும் கலாநிதி லயனல் போபகே 'இலங்கையில் ஜனநாயகத்துக்கான குரல்' என்ற தன்னார்வ அமைப்பை நடத்தி வருகிறார். இந்நாட்டில் வாழ்ந்து வரும் மொழிச் சிறுபான்மையினர் மற்றும் விளிம்பு நிலைச் சமூகங்கள் ஆகியோரின் அரசியல், கலாசார உரிமைகளுக்காக அந்த அமைப்பு தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

தற்போது நாடு திரும்பியிருக்கும் அவர் ஒரு யூடியூப் தளத்தில் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிரியுடன் நடத்திய விரிவான உரையாடலொன்றில் இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரங்கள்குறித்து தனது கருத்துக்களை பதிவு செய்திருக்கிறார்.

'தேசிய இனப் பிரச்சினை தொடர்பான ஜேவிபி நிலைப்பாடு மற்றும் அதன் வன்முறைச் சாய்வு ஆகிய இரண்டு முக்கியமான விடயங்களின் அடிப்படையில் நீங்கள் 1983 ன் பின்னர் அக்கட்சியிலிருந்து வெளியேறி, அதன் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கிறீர்கள். ஆனால், இன்று ஜேவிபி யின் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறீர்கள். இது ஏன் என விளக்க முடியுமா?' என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர் –

'தேசிய இனப் பிரச்சினை மற்றும் வன்முறை ஆகிய விடயங்கள் தொடர்பான என்னுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இலங்கையில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் அவற்றுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பெற்று, சமத்துவமான பிரஜைகளாகக் கண்ணியத்துடன் வாழக்கூடிய ஒரு சூழல் நாட்டில் உருவாக வேண்டும் என்பதே எனது அவா.'

'2016 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பான ஜேவிபி யின் அணுகுமுறையில் படிப்படியான ஒரு மாற்றம் ஏற்பட்டு வருவதை அவதானித்திருக்கிறேன். இப்பொழுது அந்த அணி 'சுய நிர்ணய உரிமை' என்ற வார்த்தையை நேரடியாகக் கூறாவிட்டாலும் கூட, தமிழ் மக்களையும் உள்ளிட்ட




# இனவாதத்தை மூலதனமாக வைக்காத அனுராவின் வெற்றி

இலங்கையின் சிறுபான்மை சமூகங்கள் அவற்றுக்கே உரிய தனித்துவமான பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றன என்ற விடயத்தையும், அப்பிரச்சினைகள் ஒவ்வொன்றும் புறம்பான விதத்தில் கையாளப்பட வேண்டும் என்ற விடயத்தையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றது.

'அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகளை அவர்கள் விரிவாக விளக்கிக் கூறாவிட்டாலும் கூட அதுவே ஒரு குறிப்பிடுச் சொல்லக்கூடிய மாற்றம் என நான் நினைக்கிறேன்'.

'மேலும் இன்று தேசிய மக்கள் சக்தி பல முற்போக்கு அமைப்புகளையும், குழுக்களையும், பன்முகப்பட்ட தொழில்வாண்மையாளர் கழகங்களையும் உள்வாங்கிய ஒரு பரந்த முன்னணியாக எழுச்சியடைந்திருக்கின்றது.'

'மாகாண சபைகள் தொடர்பாக மீகக இன்னமும் ஒரு சில மாற்றுக் கருத்துக்களை கொண்டிருந்த போதிலும், 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும் என்ற விடயத்தை அது ஏற்றுக் கொள்கின்றது. குறிப்பாக, தமிழ் தரப்புடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கண்டறியப்பட வேண்டும் என்றும் அது கருதுகிறது.' என்று கூறினார்.

'பழைய ஜேவிபி இப்பொழுது என்பிபி என்ற முகமூடியுடன் களமிறங்கியிருக்கிறது. அது எந்த ஒரு நேரத்திலும் மீண்டும் வன்முறையைக் கையில் எடுக்க முடியும்' என ஒரு சில விமர்சகர்கள் கூறி வருவதை எப்படிப் பார்க்கிறீர்கள்' என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்,



'இலங்கை சமூகத்தின் அனைத்து தரப்புக்களையும் உள்வாங்கி ஒரு பாரிய மக்கள் இயக்கமாக எழுச்சியடைந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி இனிமேல் எந்தவொரு காரணத்திற்காகவும் வன்முறையை நாட வேண்டிய தேவை அறவே இருந்து வரவில்லை' என ஆணித்தரமாகக் கூறினார்.

'1987 - 1989 கிளர்ச்சியின் போது ஜேவிபி ஒரு தீவிர சிங்கள தேசியவாத நிலைப்பாட்டை எடுத்திருந்தது. அந்தப் பின்னணியிலேயே வன்முறைகள் நிகழ்த்தப்பட்டிருந்தன.

'ஆனால், இன்றைய என்பிபி யில் அந்தக் கருத்தியலுக்கு இடமில்லை. என்கிறார் கலாநிதி போபகே.

கடந்த 75 வருட நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் தமிழினம் சந்தித்த இன்னல்களுக்குச் சிங்கள பௌத்தஇனவாத தலைவர்கள் மட்டுமல்ல அவர்களோடு திரை மறைவில் இரகசிய கூட்டு வைத்திருந்த தமிழ் தலைவர்களும் காரணமாகும்.

# சாகோஸ் தீவுகள் - இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி; மொரிஷியஸுக்கு மீள ஒப்படைப்பு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

(பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான 'சாகோஸ் தீவுகள்' தொடர்பாக பல வருடங்களாக நிலவி வந்த கசப்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டுள்ளது)

பல தசாப்தங்களாக நிலவி வந்த தகராறுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க உடன்பாடு எட்டப்பட்டதாக ஐக்கிய இராச்சியம் 3/10/24 வியாழக்கிழமை அறிவித்தது.

சர்வதேச நீதிமன்றத்தால் (ஐஇஓ) 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொரிஷியஸின் இறையாண்மைக்கான அழைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2022 இல் தொடங்கிய 13 சுற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

மொபீஷியஸிலிருந்து சாகோஸ் தீவுக்கூட்டம் பிரிந்ததால் ஏற்படும் சட்டபீதியான விளைவுகள் குறித்து சர்வதேச நீதிமன்ற கோரிக்கையின் பேரில் மொபீஷியஸின் பிரதமர் பிரவிந்த் குமார் ஜுக்நாத் ஐநா பொதுச் சபை கூட்டத்தில் அண்மையில் உரையாற்றினார்.

**சட்டத்திற்கு புறம்பான ஆபிரிக்க காலனி:**

1968 இல் மொரிஷியஸுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன், பிரித்தானியா சட்டத்திற்குப் புறம்பாக பிரித்தானியா அரசால் 'பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் பிரதேசம்' (BIOT) என பெயரிடப்பட்ட சாகோஸ் தீவுக் கூட்டத்தில் ஒரு புதிய காலனியை உருவாக்கியது.

ஐஇஓ தீர்ப்புகளை வெறும் ஆலோசனைக் கருத்து என்று வாதிட்டு, தீவுகளை மொரிஷியஸுக்குத் திரும்பக் கோரும் ஐ.நா தீர்ப்புகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளை பிரிட்டன் ஆரம்பத்தில் நிராகரித்தது. ஐஇஓ என அழைக்கப்படும் உலக நீதிமன்றம், நாடுகளுக்கு இடையேயான தகராறுகளை தீர்ப்பளிக்கும் ஐ.நா.வின் கொள்கை நீதித்துறை அமைப்பாகும்.

**தீவுவாசிகளின் கட்டாய இடம்பெயர்வு:**

மொரிஷியஸிலிருந்து இத் தீவுகளைப் பிரித்து 1,500 முதல் 3000 தீவுவாசிகளை இங்கிலாந்து வெளியேற்றியது. இதன் பின்னர் சாகோஸ் தீவுகளில் மிகப்பெரிய டியாகோ கார்சியாவை அமெரிக்காவிற்கு இராணுவப் பயன்பாட்டிற்காக குத்தகைக்கு விடப்பட்டது. இவ் ஆக்கிரமிப்பை அமெரிக்க - இங்கிலாந்து இரு நட்பு நாடுகளும் கூட்டாகச் செயற்படுத்தின.

ஆக்கிரமிப்பின் பின்னர் சாகோஸில் நிரந்தர மக்கள் தொகை இல்லை என்று இங்கிலாந்து பொய்யாக அறிவித்தது. அதனால் அது தனது காலனித்துவ ஆட்சியை ஐநாவிடம் தெரிவிக்கவில்லை. உண்மையில், சாகோசியன் சமூகம் பல நூற்றாண்டுகளாக அங்கு சாகோஸில் வாழ்ந்து வந்தது.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் 1967 மற்றும் 1973 க்கு இடையில் சாகோசியன் மக்களை





# சாகோஸ் தீவுகள் – இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி; மொரிஷியஸுக்கு மீள ஒப்படைப்பு!

வலுக்கட்டாயமாக இடம்பெயர வைத்ததன் பின்னரே டியாகோ கார்சியாவில் பாரிய இராணுவ தளத்தை உருவாக்கியது.

### டியாகோ கார்சியா இராணுவ தளம்:

புதிய ஒப்பந்தத்தின் கீழும் டியாகோ கார்சியாவில் உள்ள இங்கிலாந்து-அமெரிக்க இராணுவ தளத்தின் கட்டுப்பாட்டை இங்கிலாந்து தொடர்ந்து வைத்திருக்கும்.

ஐக்கிய இராச்சிய வெளியுறவுச் செயலர் டேவிட் லாம்மி, இராணுவ தளத்தின் எதிர்காலத்தை இங்கிலாந்து அரசாங்கம் பாதுகாத்துள்ளதுடன், நெருங்கிய காமன்வெல்த் பங்காளியான மொரிஷியஸுடனான நமது நீண்டகால உறவுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளார். நீண்ட காலமாக சாகோஸ் தீவுகளில் வசிக்கும் பழங்குடியினரான சாகோசியர்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு வந்தனர்.




மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் அவர்களின் வாழ்விட உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

### புதிய ஒப்பந்தம் அமுலாகுமா ?

பிரித்தானியா சாகோஸ் தீவுகளை மொரிஷியஸுக்கு திருப்பித் தர, 13 சுற்று பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச அழுத்தங்களை தொடர்ந்து கடைசி ஆப்பிரிக்க காலனியை திரும்ப ஒப்படைக்க புதிய ஒப்பந்தம் உருவாகி உள்ளது.

1960- 1970களில் தங்கள் சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட சாகோசியர்களுக்கு திரும்புவதற்கான உரிமையை இந்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. பிரித்தானியாவின் அன்றைய ஆக்கிரமிப்பு மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் போருக்குப் பிந்தைய காலனித்துவத்தின் மிகவும் அவமானகரமான அத்தியாயங்களில் ஒன்றாக விவரிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தீவான டியாகோ கார்சியா தொடர்ந்து இங்கிலாந்து-அமெரிக்க கூட்டு இராணுவ தளத்தை கொண்டிருக்கும். மேலும் இது இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்கும்.

### 40 ஆண்டு கால நீண்ட போராட்டம்:

1968 இல் இங்கிலாந்தால் சாகோஸ் தீவுகள், மொரிஷியஸின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டு 3000 பேர் வரை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைக்கப்பட்டனர்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இந்த ஒரு நீண்ட போராட்டத்தில், அங்கு வாழ்ந்த மக்களில் பலர் இறந்துவிட்டனர். ஆயினும் 2000 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து நீதிமன்றங்களில் இத்தீவுகளின் இறையாண்மையின் மீது தொடர்ச்சியான சட்ட சவால்களை எதிர் கொண்டது. தற்போதய மீள ஒப்படைப்பின் பின்னர், எத்தனை சாகோசியர்கள் தீவுகளுக்குத் திரும்ப விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, அங்குள்ள குடியிருப்புகள் பல வசிக்கத் தகுதியற்றவை. அங்கு வரும் சாகோசியர்களின் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கோரியுள்ளனர்.

### சக்தியற்றவர்களின் குரல் :

நமது தாயகத்தின் இறையாண்மை தொடர்பான இந்த நோக்கத்தை உருவாக்கிய பேச்சுவார்த்தைகளில் இருந்து சாகோசியன் சமூகத்தை விலக்கியதை சாகோசியன் குரல்கள் வருத்தம் தெரிவிக்கின்றன. சாகோசியர்கள் இந்த முடிவை ஊடகங்களிலிருந்து கற்றுக்கொண்டனர். நமது சொந்த எதிர்காலத்தையும் நமது தாயகத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் சக்தியற்றவர்களாகவும் குரலற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என 'சாகோசியன் குரல்கள்' எனும் பிரிட்டன் மற்றும் பல நாடுகளில் உள்ள சமூக அமைப்பானது நேற்றய வியாழன் அறிவிப்பு பற்றி கூறியுள்ளது. அத்துடன் இந்த ஒப்பந்தத்தில் சாகோசியர்கள் கலந்தாலோசிக்கப் படவில்லை அல்லது ஈடுபடவில்லை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் அமைந்தன எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை தீவுகளின் பழங்குடியினரான சாகோசியர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் தாயக உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

அதேவேளையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், இந்த ஒப்பந்தத்தை நாடுகள் இடையே அமைதியான மற்றும் பரஸ்பரம் அடைய முடியும் என்பதற்கான தெளிவான பார்வை என்று கூறியுள்ளார்.

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (ஏகீவி), கடந்த ஆண்டு அறிக்கையில், சாகோஸ் தீவுவாசிகளின் பலவந்தமான இடப்பெயர்ச்சியால் பாதிக்கப்பட்ட தலைமுறைகளுக்கு முழு மற்றும் நிபந்தனையற்ற இழப்பீடுகளை இங்கிலாந்து வழங்க வேண்டும் என்று கூறியுள்ளது.

ஆயினும் இந்த ஒப்பந்தம் இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திகிய பின்னரும், சாகோசியர்கள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புவார்கள் என்பதற்கு இது உத்தரவாதம் அளிக்கவில்லை. மேலும் ஒரு நூற்றாண்டுக்கு மிகப்பெரிய தீவான டியாகோ கார்சியாவிலிருந்து அவர்களை வெளிப்படையாகத் தடை செய்வதாகத் தோன்றுகிறது.

மேலும் அவர்கள் அனைவரும் தங்கள் எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய இழப்பீடுகளை வழங்குவது பற்றி குறிப்பிடவில்லை. இந்த ஒப்பந்தம் அவர்களின் உரிமைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் சாகோசியர்களுடன் அர்த்தமுள்ள ஆலோசனைகளை பகிர வேண்டும். இல்லையெனில் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இப்போது மொரீஷியஸ் நாடும் முன்னைய காலனித்துவ குற்றத்திற்கு பொறுப்பாகும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோரியுள்ளது.

# சாகோஸ் தீவுகள் – இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி; மொரிஷியஸுக்கு மீள ஒப்படைப்பு!





# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நீதி மறுக்கப்பட்ட நவாலி தேவாலய படுகொலை!!

**நவீனன்**

( சிறி லங்காவின் புதிய அரசு ஈஸ்டர் தாக்குதலை மீள விசாரிக்க உள்ளதாக தெரிவித்தாலும், நவாலி தேவாலயப் படுகொலைகளை விசாரிக்குமா என்பது சாத்தியமற்றதே. சர்வதேச நீதி கோரி நிற்கும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைப் போல சர்வதேச நீதி கோரலில் நவாலி தேவாலய படுகொலையும் இடம் பெற வேண்டும். இதன் மூலமே சர்வதேசம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும்)

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் மூடி மறைத்துள்ளதாக கொழும்பு பேராயர் இல்லத்தில் அருட்தந்தை சிரில் காமினி குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை செய்ததாக அறியப்படுகிறது. ஐந்து வருடங்களாக எதற்காக இந்த ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தை இழுத்துக் கொண்டு போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

நாட்டில் கொலை கலாசாரத்தை ஆரம்பித்தது யார்? இந்தக் கொலைகளை சாதாரணமாக்கியது யார்? அரசியல் அதிகாரத்திற்கு வர நாட்டு மக்களின் உயிர்களை பலியொடுத்த தரப்பினர் யார் என்பதை நாட்டு மக்களும் புரிந்து கொள்வார்கள்.

இதன் பின்னால் எந்த அரசியல் சக்தி உள்ளது? எந்த எந்த அரசியல் அதிகாரிகள் இதன் பின்னணியில் உள்ளார்கள் என்பதை நாம் தேட வேண்டும் என அருட்தந்தை சிரில் காமினி குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சனல் 4 ஊடகத்தில் வெளியான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்களை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்தக் குழுவின் அறிக்கையும் அவரிடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், தற்போது குறித்த அறிக்கை காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மிகவும் உறுதியான சாட்சிகள் மற்றும் தரவுகள் காணப்பட்டன. முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்சவோ, ரணில் விக்ரமசிங்கவோ இது தொடர்பாக ஆணைக்குழுக்களை அமைத்தாலும், அடுத்தக்கட்ட நகர்வுகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் அருட்தந்தை சிரில் காமினி குற்றம்சாட்டியுள்ளார்.

ஏன் இப்படி செய்ய வேண்டும்? ஒன்று இவர்கள் இந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது, தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் இவர்களது நெருங்கிய தரப்பி




# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# நீதி மறுக்கப்பட்ட நவாலி தேவாலய படுகொலை!!

னராக இருக்க வேண்டும். அப்படியானால் மட்டும் தான் இந்த விடயங்களை இவர்கள் மூடிமறைத்திருக்க வேண்டும் என்றும் அவர் அருட்தந்தை சிரில் காமினி தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

அப்பாவி உயிர்கள் பல காவு கொள்ளப்பட்ட அந்த நாட்களை தென்இலங்கையர்கள் வாழ்வில் ஆறாத வடுக்களாக மாற்றியது. இன்றுவரை அது மனங்களில் கணன்று கொண்டிருக்கிறது. இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இலங்கையை மட்டுமல்ல சர்வதேச நாடுகளையும் உலுக்கிப் போட்டது.

கோரமிக்க இந்த குண்டு தாக்குதலில் 250க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன் இதில் சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் உள்ளடங்குகின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் செனல் 4 ஊடகம் வெளியிட்ட ஆவணப்படத்தில் பல உண்மைத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரகசியங்கள் உடைக்கபடுமா அல்லது முடிவில்லாது விசாரணைகள், ஆணைக்குழுக்கள் என்று காலம் கடந்து கொண்டிருக்கிருமா எனத் தெரியவில்லை.

## நவாலி தேவாலயத் படுகொலை:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் போலவே 29 வருடங்கள் முன்பாக, நவாலி தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் வலி, உயிர்தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் என்றும் எஞ்சிநிற்பதுடன் அந்தப் படுகொலை எப்போதும் நினைவிலிருக்கும்.

நவாலி தேவாலயத் தாக்குதல் யாழ்ப்பாணம் (சென் பீட்டர் தேவாலய) மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி இன்று 29 வருடங்கள் கடந்து இருக்கின்றது.

யாழ். நவாலி தேவாலயத்தில் இருப்பது பொது மக்கள் என்று தெரிந்தே சிறீலங்காவின் விமானப் படையினர், தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தெரிவித்தன.

இலங்கை விமானப் படையினரே குற்றவாளிகள் எனக் கூறப்படும் சூழலில், நவாலி தேவாலய தாக்குதலில் உயிர்தப்பியவர்களாலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினராலும் மற்றும் வடக்கிலுள்ள தமிழ் அமைப்புகளாலும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போய் விட்டது.

நவாலி சென் பீட்டர் தேவாலயத்தின் மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு

29 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை. ஆயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச ஆதரவுகள் பல கிடைத்தன.

ஆனால் வடக்கு - கிழக்கில் அத்தகைய ஆதரவைப் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

### பொது மக்கள் என்று தெரிந்தே தாக்குதல்:

1995ம் ஆண்டு ஜூலை 9 இல் யாழ்ப்பாணம் நவாலி தேவாலயம் (சென். பீற்றர்ஸ்) மீது இலங்கை விமானப் படையினரால் நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 150 பேருக்கு மேல் காயமடைந்தனர். வலிகாமம் பகுதியில் இலங்கை அரசினரால் முன்னோக்கிப் பாய்தல் (லீப் ஃவோர்வேட்) இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த புக்காரா விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியது. மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

### தமிழ் இனப் படுகொலை

நவாலி தேவாலய படுகொலை நினைவு நாளில் இது தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், 1995 ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி கால கட்டத்தில் சிறீலங்கா விமானப் படையினரால் குண்டு தாக்குதல் நடாத்தி 100க்கும் மேற்பட்ட உயிர்கள் கோரமாக கொல்லப்பட்டு பல வருடங்கள் கடந்து இருக்கின்றது.

சந்திரிகா அரசின் ஆட்சி காலத்தில் தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்து இருந்தார்கள். அப்போது இலங்கையினுடைய விமானப் படைக்கு சொந்தமான இரண்டு 'புக்காரா' விமானங்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிறுவர்கள் பெரியவர்கள் பெண்கள் முதியோர்கள் என்று வேறுபாடு இல்லாமல் உடல் சிதறி பலியானார்கள் பலர் படுகாயம் அடைந்தார்கள்.

இது ஒரு அப்பட்டமான தமிழ் இனப் படுகொலையாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம். அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கத்தாலும் நீதி வழங்கப்படவில்லை.

### நினைவுச்சின்னங்களும் - நினைவு கூரும் வழிபாடுகளும்:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நினைவுச்சின்னங்கள், கட்டுவாபிட்டி (நீர்கொழும்பு) மற்றும் கொச்சிக்கடை (கொழும்பு) ஆகிய இடங்களில் ஓரிரு மாதங்களிலேயே நிறுவப்பட்டதுடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் முதலாவது வருட பூர்த்தியை நினைவுகூருவதற்கான விரிவான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்
# நீதி மறுக்கப்பட்ட நவாலி தேவாலய படுகொலை!!






# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நீதி மறுக்கப்பட்ட நவாலி தேவாலய படுகொலை!!

அரசாங்கத்தின் வெளிப்படையான ஆதரவுடன் கொழும்பு மறைமாவட்ட பேராயரால் முதல் வருட நினைவு நிகழ்வுகள் தேசிய அளவில் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் தேசிய தொலைக்காட்சிகளில் நினைவு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

கொழும்பு பேராயரின் நீதிக்கான கோரிக்கைக்கு தேசிய ஊடகங்களில் முக்கிய இடம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்தப்பியவர்களின் அதிர்ச்சியை மதிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் துன்பத்திற்கு கண்ணியமளித்தல், நீதி மற்றும் இழப்பீடு என்பனவற்றுக்கும் இந்த நிகழ்வுகள் முக்கியமான தாகும்.

**வடக்கில் நினைவுகூர மறுப்பு:**

ஆயினும் தமிழர் பகுதிகளில் இத்தகைய நினைவுகூரலுக்கு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் நவாலியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அச்சமூகம் எளிமையான நினைவுச்சின்னம் ஒன்றை நிர்மாணித்துள்ளனர். வருடாந்தம் நினைவு நிகழ்வுகள் உள்ளூர் சமூகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படுகின்றன.

பல வருடங்கள் கடந்தும் கூட அந்த சோகத்தின் வலி, உயிர் தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் எஞ்சிநிற்பதுடன் அந்தப் படுகொலைக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை.

தற்போது ஆண்டு தோறும் ஜுலை 9ம் நாள் நவாலி புனித பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் நினைவுகூரும் வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயப்பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மூன்று ஆண்டாக திட்டமிட்ட ஈஸ்டர் தாக்குதல்:**

275க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ச அரசுக்கு விசுவாசமாக செயற்பட்டவர்கள், இருந்ததாக 2024 செப்டெம்பர் 05 பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளதாக 'தி டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல வருடங்கள் ராஜபச்சக்களின் விசுவாசியாக இருக்கும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருக்கும், ஹன்சீர் அசாத் மௌலானா என்பவர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் 'தி டைம்ஸ்' ஊடகம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என ராஜபக்சக்கள் விரும்புவதாகவும் அவ்வாறான ஒரு சூழ்நிலை இருந்தால் மட்டுமே கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக ஆட்சி பீடம் ஏற முடியும் எனவும் அவர்கள் கருதுகின்றனர் என சுரேஷ் சாலே தம்மிடம் கூறியதாக குறித்த நபர் தெரிவித்துள்ளார். இந்த குண்டு தாக்குதல் ஒன்றிரண்டு நாட்களில் திட்டமிடப்படவில்லை எனவும் மூன்று




# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நீதி மறுக்கப்பட்ட நவாலி தேவாலய படுகொலை!!

ஆண்டுகளாக திட்டமிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றுவதற்காக நாட்டை ஸ்திரமற்றதாக்கும் முயற்சியாக




இந்த குண்டு தாக்குதல் அமைந்திருந்தது என தெரிவித்துள்ளார்.

## அப்பட்டமான மனித உரிமை மீறல்:

நவாலி தேவாலயம் அகோர சம்பவத்தில் இறந்தவர்களுடைய உறவுகள் இன்னும் அந்த துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகளுக்கு நினைவேந்தல் செய்வதற்கும் கூட அப்போதைய ஆட்சியாளர்கள் தடுத்து வந்தார்கள்.

படுகொலை செய்யப்பட்ட நினைவுச் சின்னங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் கடந்த ஆண்டும் இம்முறையும் புலனாய்வாளர்கள் நிறுத்தப்பட்டு நினைவேந்தலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்து வந்தது.

இது அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறலாகும். ஏனெனில் ஒரு உரிமைக்காக போராடிய இனம், அந்த போராட்ட காலத்தில் நடைபெற்ற படு கொலைகளை நினைவுகூற அரச ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மறுத்து வருகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி இந்த நாட்டில் நீதி கிடைக்கும் என்ற ஒரு கேள்வி எல்லோர் மத்தியிலும் எழுந்து இருக்கின்றது.

## சர்வதேச நீதி வேண்டும் :

ஆகவே இவற்றிற்கு எல்லாம் ஒரு சர்வதேச நீதி பொறி முறை வேண்டும் என்பதற்காகத் தான் தமிழினம் சர்வதேச நீதி கோரி நிற்கின்றது. ஆகவே இந்த சர்வதேச நீதி கோரலில் நவாலி படுகொலையும் இடம் பெற வேண்டும். அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இவ்வாறான இந்த படுகொலைகளுக்கு நீதி கிடைக்கின்ற போது தான் எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு உறுதியான பாதுகாப்பும் அவர்களுடைய உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற நியாயமான சூழ்நிலைகள் உருவாக சாத்தியமாகலாம்.



# மட்டக்களப்பில் 5 ஆசனங்களுக்காக 392 பேர் போட்டி

## 6 சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

பாராளுமன்ற தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 23 கட்சிகளும் 33 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ள நிலையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை தலைமை வேட்பாளராக கொண்டு வேட்புமனுவை தாக்கல் செய்த ஜனநாயக தேசிய கூட்டணி மற்றும் 6 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி.ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் கடந்த 4 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக கட்டடத்தில் இடம்பெற்று வந்த நிலையில் இறுதித் தினமான வெள்ளிக்கிழமை வரை 33 சுயேச்சை குழுக்களும் 23 அரசியல் கட்சிகளும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

அதன் அடிப்படையில் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன்,தேசிய ஜனநாயக முன்னணி கட்சியில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளதுடன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் கட்சியின் உப தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்டோர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவினை தாக்கல் செய்துள்ளனர்.அத்தோடு மேலும் பல அரசியல் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன .

கடந்த 4 ஆம் திகதி முதல் இறுதி தினமான வெள்ளிக்கிழமை வரை 33 சுயேட்சை குழுக்களும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தேசிய ஜனநாயக முன்னணி, தேசிய மக்கள் சக்தி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, மக்கள் போராட்டம் முன்னணி, ஜனசத்த பெரமுனை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட 23 கட்சிகள் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்டிகளை தெரிவுசெய்வதற்காக இம்முறை 392வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதில் 22 கட்சிகளினதும் 27 சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் தேர்தல் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.




# யாழ். மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 396 பேர் போட்டி

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 23 அரசியல்கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ள நிலையில் 6 ஆசனங்களுக்காக 396 பேர் போட்டியிடுகின்றனர்.

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது வெள்ளிக்கிழமை நண்பகலுடன் முடிவுக்கு வந்தது. இவ்வாறான நிலையிலேயே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக 23 அரசியல்கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இது தொடர்பில் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிகையில்,

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகள், 23 சுயேச்சைக் குழுக்களால் தாக்கல் செய்யபடநிலையில் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன .

வேட்புமனு தாக்கலுக்கான காலக்கெடு வெள்ளிக்கிழமை நண்பகல் நிறைவடைந்த நிலையில் வேட்புமனுக்கள் தொடர்பாக ஆட்சேபனைகளை முன்வைக்க அவகாசம் வழங்கப்பட்டது.

இதன் போதே இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன . எனவே இம்முறை பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில்44 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 23 கட்சிகளை சேர்ந்த 207 பேரும் 21சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 189 பேருமாக 396 பேர் 6 ஆசனங்களுக்காக போட்டியிடுகின்றனர் ,இந்த தேர்தலில் 3,72,913 பேர் வாக்களிக்கவுள்ளனர் என்றார்.

# திருமலை மாவட்டத்தில் 4 ஆசனங்களுக்கு 217 பேர் போட்டி

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திருகோணமலை மாவட்டத்தில் 17 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 20 சுயேச்சைக் குழுக்களும் மாவட்ட செயலகத்தில் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்த நிலையில் 3 கட்சிகளினதும், 3 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நியமனப்பத்திரம் சரியாக வழங்கப்படாமைக்காக தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் சத்தியக்கடதாசி வழங்கப்படாமைக்காக அகில இலங்கை தமிழர் மகாசபை மற்றும் ஐக்கிய தேசிய சுதந்திரக் கூட்டணி ஆகிய பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் மூன்று சுயேச்சைக் குழுக்களது வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ள 4 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக 217 பேர் போட்டியிடவுள்ளதுடன், இவர்களை தெரிவு செய்வதற்காக 3,15,925பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.



# மட்டக்களப்பில் பல கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனு தாக்கல்

மட்டக்களப்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட், முன்னாள் அமைச்சர் அலிஸாஹீர் மௌலானா ஆகியோர் இந்த முறைமுறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

அதேவேளை முன்னாள் முதலமைச்சர் ஹிஸ்புல்லா, பிரதி அமைச்சர் அமீர் அலி, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பல கட்சிகள் வெள்ளிக்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் முதலமைச்சர் ஹிஸ்புல்லா தலைமையில் மரச் சின்னத்திலும், தமிழர் விடுதலைக் கூட்டணி சூரியன் சின்னத்தில் சா. அருண் தம்பிமுத்து தலைமையிலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ரெலிபோன் சின்னத்தில் முள்ளர் பிரதி அமைச்சர்களான கணேசமூர்த்தி, அமீர் அலி தலைமையிலும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் சமாதான கூட்டமைப்பிலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை தாமரை மொட்டு சின்னத்தில் ரொசான் அமிந்த ஜெயசிங்க தலைமையிலும், சர்வஜன பல கட்சி முகமது சாபி தலைமையிலும்,

ஜனநாயக தேசிய முன்னணி கட்சி தபால் பெட்டிச் சின்னத்தில் முன்னாள் இராஜங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையிலும், சிறிலங்கா மக்கள் கட்சி அஜ்மல் இஸ்பாஹான் தலைமையிலும், புதிய ஜனநாயக கட்சி காஸ் சிலிண்டர் சின்னத்தில் சுதர்சன் தலைமையிலும் ,மட்டக்களப்பு தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவரும் ரணில் 24 செயலணி கிழக்கு தலைவருமான கணவதிப்பிள்ளை மோகன் சுயேச்சைக் குழுவிலும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் - கழுகு சின்னத்தில் போட்டியிட நா.விஸ்னுகாந்தன் தலைமையிலும் பல சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுதாக்கல் செய்துள்ளன.












## 22 தேர்தல் மாவட்டங்களில்

# 10,000 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டி

## 74 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 196 ஆசனங்களுக்காக 690 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கை கடந்த 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடைபெற்றது. இதன்படி 11ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்தது.

இந்தக் காலப்பகுதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்ததுடன், அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 690 குழுக்கள் தேர்தல் களத்தில் போட்டியிட தகுதி பெற்றுள்ளன. 225 ஆசனங்களை கொண்ட பாரராளுமன்றத்திற்கு இந்த குழுக்களின் வேட்பாளர்களில் இருந்து 196 பேரே தெரிவு செய்யப்படவுள்ளனர். மிகுதி 29 ஆசனங்களுக்கும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் வாக்கு விகிதாசாரத்திற்கு அமைவாக தேசியப் பட்டியல் ஊடாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அதிகளவில் போட்டியிடும் தேர்தலாக இது அமைவதுடன், சிரேஷ்ட அரசியல்வாதிகள் போட்டியிடாத தேர்தலாகவும் அமைந்துள்ளது.



சகல மாவட்டங்களிலும் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் பெயர் அகர வரிசை ஒழுங்கில் விரைவில் மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலகங்களால் வெளியிடப்பட்டவுள்ளன.



# தென்னிலங்கையின் அரசியல் அலையில் அள்ளுண்டு போக தமிழர் விரும்பவில்லை

## தமிழர் சம உரிமை இயக்கம்

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகள் இது வரை கிடைக்காத நிலையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்குள் அள்ளுண்டுபோக தமிழ் மக்கள் விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ள தமிழர் சம உரிமை இயக்கம், தூய மாற்றத்துக்காக வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பசு சின்னத்திலும், வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான த.நிகேதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

‘ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் வழிப்படுத்தலில் மாற்றத்துக்கான தமிழ்த் தேசிய சக்தியாக தமிழ்த் தேசிய தளத்தில் மக்கள் வாழ்வியலை மேம்படுத்தவே நாம் களம் கண்டுள்ளோம். தூய மாற்றத்துக்கான தமிழ்த் தேசிய களத்தில் தமிழர் சம உரிமை இயக்கத்தினர் யாழில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டு சின்னத்திலும் சுயாதீனமாகப் போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் போருக்குப் பின்னரான 15 ஆண்டுகளில் தற்போது களத்திலுள்ள அனைத்து தமிழ்க் கட்சிகளையும் நம்பி களைத்து விட்டனர். நாம் இதுவரை வாக்களித்துத் தெரிவு செய்தவர்கள் தங்களுக்குள் அடிபடுவதிலும் சுகபோகங்களை அனுபவிப்பதிலும் அதனைவிட பார் பெர்மிட் பெற்று மக்களைப் போதைக்கு அடிமையாக்கி இளையோரை அழிக்கத் துணை போகின்றனரே அன்றி மக்களுக்கான எந்த நல்ல விடயங்களையும் செய்யவில்லை.

தமிழர் தரப்பின் இந்தகக் கையறு நிலையில் தெற்கில் மாற்றத்தை எற்படுத்தியோர் வடக்கிலும் காலூன்ற முனைகின்றனர். தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷைகளைச் சமஷ்டி முறை இணைந்த வடக்கு - கிழக்கு மாநிலமோ, சம உரிமைகளோ இன்னும் கிடைக்காத நிலையில், தெற்கின் அலையில் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை.

காலத்தின் தேவை கருதி குறுகிய அவகாசம் இருப்பினும் மாற்றத்துக்கான தூய பொது முகங்களாக சமூகத்தின் சகல தளங்களிலிருந்து தமிழ்த் தேசிய மனிதநேயச் செயற்பாட்டாளர்களான நிபுணர்களும் பெண்களும் இளையவர்களும் தியாக வேள்வியில் இளமைக் காலத்தை அரப்பணித்த தமிழ்த் தேசிய போராளிகள் மாற்றுத் திறனாளிகள் என அனைவருக்கும் நாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

தொகுதிவாரியாக பொறுப்புக்கூறும் கடப்பாட்டுடன் நிறுத்தப்பட்டுள்ள எமது பொது முகங்களான முதன்மை வேட்பாளர் கல்வியியலாளர் கலாநிதி தே.தேவானந்த், ஊடகவியலாளர் ந. பொன்ராசா, சட்டத்தரணி ஜெ. நீலலோஜினி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் அ.சிவஞானம் உள்ளிட்ட வேட்பாளர் குழாம் யாழில் பசு சின்னத்திலும், தமிழ்த் தேசிய போராளி முல்லை ஆனந்தன், முல்லையின் பட்டதாரி இளைஞர் கோகுலன், வன்னி மாற்றுத்திறனாளிகள் சங்க வவுனியா உப தலைவர் சாந்தகுமார், தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்க மன்னார் செயலாளர் திருமதி பாமினி உள்ளிட்ட குழாமினர் வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டிபிடுகின்றனர். இவர்களை ஆதரித்து தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டுகின்றோம்.’ - என்றுள்ளது.



# யாழில் ஆறு ஆசனங்களையும் வெல்லுவோம்

## வைத்தியர் அர்ச்சுனா தெரிவிப்பு

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஆறு ஆசனங்களையும் நாங்கள் பெற்றுக்கொள்வோம் என சுயேட்சை குழு 17 இன் முதன்மை வேட்பாளர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரு விளையாட்டு வீரனாக தோல்வியையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் தனக்கு உண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் திங்கட்கிழமை நடைபெற்ற வேட்பாளர் அறிமுகம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எங்களுடைய அரசியல் பயணம் ஏழைகளுக்கான அரசியல் பயணமாக இருக்கும். மக்களின் தேவைக்காக ஆளுமை மிக்கவர்களை ஒன்றிணைந்து, பாதை மாறி போகும் தமிழ் தேசியத்தை சரியான பாதைக்கு கொண்டு வருவோம்.

தமிழ் தேசியம் பேசும் போலி தேசியவாதிகளை இனம் கண்டுள்ளோம். அதனால் சமூக பொறுப்புள்ள துடிப்புள்ள இளையோரை நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். எனவே தமிழ் மக்கள் மிக சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.



எமது போராட்டம் அரசியல் சார்பற்ற போராட்டமாக முன்னெடுத்தோம். அரசியல்வாதிகள் விட்ட தவறுகளை சுட்டி காட்டிய போது எனக்கு எதிராக திரும்பினார்கள். அப்போதே அரசியல்வாதிகள் எல்லோரும் மக்களை ஏமாற்றி வருகின்றார்கள் என்பதனை அறிந்து கொண்டேன்.

உண்மையான அரசியல் செய்ய நிதி தேவையில்லை. அரசியல் செய்ய எனக்கு இரண்டு வருடம் சம்பளம் போதும்.

மக்களுக்காக அரசியல் செய்ய பணம் தேவையில்லை. எனக்கு 10 கோடி ரூபாய் பெறுமதியான காணி இருக்கின்றது. அது எனக்கு போதும்.

மக்களிடம் பணம் பெற்றால் அது தொடர்பில் வெளிப்படை தன்மையாக செயற்படுவோம் என மேலும் தெரிவித்தார்.



# நாடாளுமன்றத் தேர்தல் 2024

அதிக அளவிலான வாக்குகளை
பெற்று நாடாளுமன்றம் செல்ல
நான்கு வருடம்
மக்கள் நன்மதிப்பை பெற்று
வெளிவந்து கொண்டிருக்கும்
உதயம் பத்திரிகை மற்றும்
இணையத்தில்
உங்கள் தேர்தல் விளம்பரங்களை
எம்முடன் இணைந்து
வெளியிடுங்கள்....

தொடர்புகளுக்கு:

**0701160009**


உதயம் செய்திகள்
பத்திரிகை,
இணையத்தின்
அறிவித்தல்
ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை
வெளிக் கொணர்வதற்கு அறிய வாய்ப்பு
உங்கள் ஊரில் உள்ள பிரச்சினைகள்,
கட்டுரைகள், சிறுகதைகள்,
கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார
ஆக்கங்களையும் உங்கள் படைப்புக்களையும்
எமக்கு அனுப்பி வைக்கவும்
info@uthayamnews.com
உதயம் செய்திகள் குழுமம்
இழந்த உயிர்களை தவி
அனைத்தையும்
பெற்றுக்கொடுத்தோம்
டொலர் நெருக்கடிக்கு
புலம்பெயர்
தமிழர்களும் காரணம்
Money
Transfer


ria
Money
Transfer
உலகின் எப்பாகத்திற்கும்
பணத்தை அனுப்ப
உடன் நாடுங்கள்
Send and receive money worldwide

Oria

அனுசரணையுடன்

# அகவை 3 இல் உதயம் செய்திகள்

3rd ANNIVERSARY

uthayam news உதயம் செய்திகள்

தமிழர்களின் புது யுகம்

பேராதரவை தொடர்ந்தும்
வழங்கி வரும் வாசகர்கள்,
எழுத்தாளர்கள்,
நலன் விரும்பிகள்
உங்களோடு கைகோர்த்துச்
செல்லும் பயணம்
இதே மகிழ்ச்சியுடன் நீளும்....

**அனைவருக்கும்**
**என்றென்றும் நன்றிகள்....**